**06.11.2025**
**MCOP.No.109/2012**
**ம.சா.2 : மாதேஸ்வரி**
**2ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை:-**

1) இறந்து போன சின்னசாமி எனது அப்பா. இந்த விபத்து 21.06.2012ம் தேதி விபத்து ஏற்பட்டது என்றால் சரிதான். எனது அப்பா இறந்தது 24.11.2016ம் தேதி என்றால் சரிதான். விபத்திற்கு பிறகு 4 வருடம் 5 மாதங்களுக்கு பிறகு தான் இறந்தார் என்றால் சரிதான். 4 வருடம் 5 மாதங்களுக்கு இறப்பதற்கு முன்பு எந்தெந்த மருத்துவமனைகளில் என்னென்ன சிகிச்சை பெற்றார் மற்றும் அதற்குண்டான ரசீதுகளை நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. எனது அப்பாவிற்கு 85-90 வயது இருக்கும் என்று சொன்னால் சரியல்ல சுமார் 70 வயது இருக்கும். எனது அப்பாவின் வயதை காண்பிக்க எந்த ஆதாரமும் ஒப்படைக்கவில்லை என்றால் சரிதான். அவருடைய மரணம் சம்பவத்திற்கு என்ன காரணம் என்று நான் எந்த சான்றிதழும் ஒப்படைக்கவில்லை என்றால் சரியல்ல. என்னுடைய தகப்பனார் வயது மூப்பு காரணமாக தான் இறந்துவிட்டார் என்றால் சரியல்ல. அவர் விபத்தில் ஏற்பட்ட காயத்தின் காரணமாக சரியாக சாப்பிட முடியாமல் உடல் நிலை சரியில்லாமல் நோய் வாய் பட்டு அதனால் தான் இறந்து விட்டார். அவர் நோய்வாய் பட்டு தான் காலமானார் என்றும் விபத்தின் ஏற்பட்ட காயத்தின் காரணமாக அவர் இறக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல.

2) அதனால் தான் மேற்படி என் அப்பாவின் இறப்பு விபத்தின் ஏற்பட்ட காயத்தின் காரணமாக அவர் இறந்தார் என்று மருத்துவர் சான்றளிக்கவில்லை என்றால் சரியல்ல. நான் தான் விபத்திற்கு பிறகு விபத்து சம்மந்தமாக போலிசிடம் புகார் கொடுத்தேன் என்றால் சரிதான். என்னுடைய புகார் அடிப்படையில் தான் மேற்படி விபத்து சம்மந்தமாக முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டது என்றால் சரிதான். என்னுடைய புகாரிலும் முதல் தகவல் அறிக்கையிலும் நானும் எனது அப்பாவும் தீடீரென ரோட்டை வடக்கிலிருந்து தெற்காக கடக்கும் போது தான் விபத்து ஏற்பட்டது என்று சொல்லி உள்ளேன் சரிதான். நானும் எனது அப்பாவும் எங்களது கவனக்குறைவு

காரணமாக தீடீரென ரோட்டை வடக்கிலிருந்து தெற்காக கடக்கும் போது தான் விபத்து ஏற்பட்டது என்றும் முதல் மனுதாரரின் கவனக்குறைவால் விபத்து ஏற்படவில்லை என்று சொன்னால் சரியல்ல. நான் சொல்வது போல ரோட்டில் நின்று கொண்டு இருக்கும்போது விபத்து ஏற்பட்டது என்று சொல்வது சரியல்ல. நான் கொடுத்த புகாரிலும் முதல் தகவல் அறிக்கையிலும் எனது அப்பா விவசாய கூலி என்று சொல்லி உள்ளேன் என்றால் சரியல்ல.

3) எனது அப்பா விவசாயம் செய்தார் என்றும் ஆடு மாடு வைத்து பால் வியாபாரம் செய்தார் என்பதற்கு ஆதாரம் எதுவும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் சரிதான். எனது அப்பா விவசாய கூலி தான் அவருக்கு விவசாயத்தின் மூலமும் ஆடு மாடுகள் மூலம் எவ்வித வருமானமும் வரவில்லை என்றும் நான் அதிக இழப்பீடு பெறுவதற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. ஆட்டோ ஓட்டுநர் மிதமான வேகத்தில் சாலை விதிகளை அனுசரித்து ரோட்டில் சென்று கொண்டிருந்தார் என்றும் நாங்கள் தான் ரோட்டை தீடீரென கடந்து விபத்தை ஏற்படுத்தினோம் என்றும் அதானல் காப்பீடு நிறுவனம் இழப்பீடு வழங்க கடமைப்பட்டவர் அல்ல என்றால் சரியல்ல. மேற்படி விபத்து சமயத்தில் ஆட்டோ ஓட்டுநருக்கு பயணிகள் வாகனத்தை ஓட்டக்கூடிய பேட்ச் உரிமம் இல்லை என்பதால் காப்பீடு நிறுவனம் இழப்பீடு வழங்க கடமைப்பட்டவர் அல்ல என்றால் சரியல்ல. எனது அப்பாவுக்கு நிரந்தர ஊனம் ஏற்பட்டதாக சொல்வதற்கு நிரந்தர ஊனச்சான்று எதுவும் ஒப்படைக்கவில்லை என்றால் சரியல்ல. நான் பல்வேறு தலைப்புகளின் கீழ் கேட்டுள்ள நஷ்டஈடு தொகை அதிகமானது என்றும் அதனை செலுத்த காப்பீடு நிறுவனம் இழப்பீடு கடமைப்பட்டவர் அல்ல என்றால் சரியல்ல.

" என்னால்/ என் முன்பாக மேற்படி சாட்சியம் பதியப்பட்டு, சாட்சிக்கு பொருள் விளக்கப்பட்டு/ படித்து காண்பிக்கப்பட்டு, அது சரி என அவரால் ஒப்புக் கொள்ளப்பட்டது."

GANESAN S

Digitally signed by GANESAN S
Date: 2025.11.06 17:34:25 +0530

**Accidents Claim Tribunal, Attur.**